# சேத்துப்பட்டு சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறைகள் முன்னிலை திரு.கோ.சம்பத்குமார்

ந.க.எண் 351/2024 அ2 நாள் 31.05.2024

(ம.வ/ந.ஊ.உ.இ(தி.மலை)எண்.31/2024)

பொருள் : மனைப்பிரிவு – திருவண்ணாமலை மாவட்டம் – சேத்துப்பட்டு வட்டம் – சேத்துப்பட்டு சிறப்புநிலைபேரூராட்சி கண்ணனூர் கிராமம் – கண்ணனூர் மதுரா பழம்பேட்டை சர்வே எண்கள். 417/1, 417/2, 417/3, 417/4, 417/6, 417/7, ஆகியவற்றில் 1.65 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியது – பேரூராட்சியில் இறுதி ஒப்புதல் வழங்குவது – சார்பு.

பார்வை : 1. திருமதி.ஜெ.ரேவதி, திரு.ஆர்.முருகன், திருமதி.ஜி.மைதிலி, திருமதி.எஸ்.பாரதி மற்றும் திரு.என்.ஆர்.சங்கர் அவர்களின் இணையதள விண்ணப்பம் எண்.DR3FL44K/2024/TVM/2024/TCP நாள்.28.01.2024

2.திருவண்ணாமலை மாவட்ட உதவி இயக்குநர் மாவட்ட நகர்புற ஊரமைப்பு அலுவலகம் அவர்களின் ந.க.எண். DR3FL44K/2024/TVM/2024/TCP நாள்.06.02.2024

3. அரசாணை (நிலை) எண் 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019 மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019

4. அரசாணை எண் 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 31.01.2020

5. அரசாணை எண் 181 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 09.12.2020

6.திருமதி.ஜெ.ரேவதி, திரு.ஆர்.முருகன், திருமதி.ஜி.மைதிலி, திருமதி.எஸ்.பாரதி மற்றும் திரு.என்.ஆர்.சங்கர் என்பவர்களால் ஏற்படுத்தப்பட்ட மனைபிரிவின் பொது திரவிடங்கள் மற்றும் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட இடத்திற்கான தானப்பத்திரம் ஒப்படைப்பு செய்த நாள்.22.01.2024.

7. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவண்ணாமலை அவர்களின் ந.க.எண்.31/2024/தி.மலை நாள்.07.02.2024.

8) பேரூராட்சி மன்ற தீர்மான எண்.13 /2024 நாள்.14.02.2023

9) திருமதி.ஜெ.ரேவதி, திரு.ஆர்.முருகன், திருமதி.ஜி.மைதிலி, திருமதி.எஸ்.பாரதி மற்றும் திரு.என்.ஆர்.சங்கர் அவர்களின் இணையதள விண்ணப்பம் நாள்.25.03.2024

10) இவ்வலுவலக ந.க.எண்.351/2021.அ2 நாள்.27.05.2023

11) இளநிலை பொறியாளர் சேத்துப்பட்டு பேரூராட்சி தலைமை இடம் அவர்களின் கடிதம் நாள்.27.05.2024.

12) அரசாணை எண்.141 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்.16.07.2022.

13) மனுதாரர்களின் 20.05.2024 – ம் தேதிய கடிதம்

14 மனுதாரர்களின் 29.05.2024 தேதிய உறுமொழி கடிதம் மற்றும் பப்ளிக் நோட்டரி சான்று.

15) திருமதி.ஜெ.ரேவதி, திரு.ஆர்.முருகன், திருமதி.ஜி.மைதிலி, திருமதி.எஸ்.பாரதி மற்றும் திரு.என்.ஆர்.சங்கர் சேத்துப்பட்டு. தி.மா. என்பவரின் மனைப்பிரிவிற்கான தொகை ரூ. 761390/– (ரூபாய் ஏழு லட்சத்து அறுபத்தி ஓராயிரத்து முந்நூற்று தொன்னூறு மட்டும்) (சேத்துப்பட்டு சிட்டி யூனியன் வங்கி வரைவேலை எண். 576631 நாள்.31.05.2024

16) இவ்வலுவலக செலத்து சீட்டு எண்.166/2024 நாள். 31.05.2024.

17) மற்றும் தொடர்புடைய ஆவணங்கள்.

V. Revathi
G. Mythili
S. Bharathi
[signature]

ஆணை

திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு வட்டம் சேத்துப்பட்டு கண்ணனூர் மதுரா பழம்பேட்டை சர்வே எண்கள். 417/1, 417/2, 417/3, 417/4, 417/6, 417/7, ஆகியவற்றில் 1.65 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட உள்ள மனைப்பிரிவிற்கு அனுமதி கோரி திருவண்ணாமலை மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், அவர்களுக்கு பார்வை 1 – ல் காணும் இணையதள விண்ணப்பம் மூலம் மனு தாரரால் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்குவது தொடர்பாக, திருவண்ணாமலை மாவட்ட நகர் ஊரமைப்பு,உதவி இயக்குநர் , மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், அவர்களால் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அரசாணைகளுக்குட்பட்டு கட்டிட விதிகள் மற்றும் அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின் அடிப்படையில் பரிசீலனை செய்து உத்தேச மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க உத்தேச சாலைகள், பூங்கா, மூலைமுடக்கு, உள்ளாட்சி உபயோகம் மற்றும் TANGEDCO உபயோக ஒதுக்கீட்டினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யக் கோரி பார்வை 3 இல் காணும் கடிதத்தின்படி மனுதாரருக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவண்ணாமலை மாவட்டம் மூலம் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், பார்வை 3, 4 மற்றும் 5–ல் கண்டுள்ள அரசாணை விதி எண் 47 உட்பிரிவு 8ன் படி சாலை அமைப்பு வரைபடத்தில் கண்டுள்ளவாறு மனைப்பிரிவு சாலைகள் தவிர்த்து மனைகளின் பரப்பளவில் உள்ளாட்சியின் பொது பயன்பாட்டிற்கான இடத்தினை உள்ளாட்சிக்கும் (Area for Local body) மற்றும் தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்திற்கும் (TANGEDCO) தானபத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்ட ஆவணங்களை அசல் தானப்பத்திரம் மற்றும் வில்லங்க சான்று ஆகியவற்றை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என பார்வை 6 இல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் மனுதாரரால் 22.01.2024 ஆம் தேதி சேத்துப்பட்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்கான இடங்கள் 170 வது எண்ணாக 22.01.2024 ம் தேதியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்திற்கு (TANGEDCO) ஒப்படைக்க வேண்டிய இடத்தினை 170 வது எண்ணாக 22.01.2024 ம் தேதியில் பதிவு செய்யப்பட்டுள்ளது மற்றும் நகர் ஊரமைப்பு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் கோரப்பட்ட ஆவணங்களையும், இணையதளத்தின் மூலமாகவும், நேரடியாகவும் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதின் அடிப்படையில் மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்து திருவண்ணாமலை மாவட்ட நகர் ஊரமைப்பு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் பார்வை 7– ல் காணும் கடிதத்தின் மூலம் அனுமதித்து குடியிருப்பு மனைபிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதலை **(ம.வ/ந.ஊ.உ.இ(தி.மலை)எண்31/2024 நாள்.07.02.2024)** என எண்ணிடப்பட்டு வரைபட அனுமதி வழங்கி வரப்பட்டுள்ளது.

மேற்காணும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுகளின் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீட்டில் கீழ்கண்ட விபரப்படி திருவண்ணாமலை மாவட்ட நகர் ஊரமைப்பு அவர்களால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்:

| வ.எண் | விவரம் | - | பரப்பளவு விழுக்காடு |
|---|---|---|---|
| 1 | மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | - | **0.67.00 ஹெக்டர் அல்லது 1.65 ஏக்கர்** |
| 2 | கோரிய மனைகள் | - | 37 |
| 3 | ஒதுக்கிய மனைகள் | | 41 |
| பொது ஒதுக்கீடு (மனுதாரர் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது) | | | |
| 1 | பூங்கா | - | 1 |
| 2 | உத்தேச சாலைகள் மற்றும் மூலைமுடக்குகள் | - | 2080,65 ச.மீ. |
| 3 | உள்ளாட்சிக்கான ஒதுக்கீடு ( Over Head Tank) | - | 31.4 ச.மீ. |
| 4 | தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கானது (Transformer Year) | - | 33.82 ச.மீ. |

பார்வை 7 ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவண்ணாமலை மாவட்டம் அவர்களின் மனைப்பிரிவு நிபந்தனைகளுக்குட்பட்டு தொடர் நடவடிக்கையாக பார்வை 8 ல் காணும் பேரூராட்சி மன்ற எண்.13 /2024 நாள்.14.02.2023—ல் மன்ற அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது

**"நகர் ஊரமைப்பு துறை அனுமதி உத்திரவு பார்வையிடப்பட்டது. உரிய கட்டணங்கள் வசூல் செய்து கொண்டு தணிக்கைக்கு உட்பட்டு அங்கீகரிக்கப்பட்டது"**

மேற்கண்ட சேத்துப்பட்டு பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்த சேத்துப்பட்டு கண்ணனூர் மதுரா பழம்பேட்டை சர்வே எண்கள். 417/1, 417/2, 417/3, 417/4, 417/6, 417/7, ஆகியவற்றில் 1.65 ஏக்கர் பரப்பளவில் கொண்ட இடத்தில் மனைப்பிரிவிற்கு திருவண்ணாமலை மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் கடித எண். DR3FL44K/2024/TVM/2024/TCP நாள்.06.02.2024 கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவுகளின் நிபந்தனைகளுக்குட்பட்டும் மனைப்பிரிவு வரைப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் அனுமதித்து மனைப்பிரிவு அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது.

திரு.ஆர்.சக்திபிரசன்னா என்பவரது மனுவில் கோரியுள்ளபடி திருவண்ணாமலை மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட கடித ந.க.எண். DR3FL44K/2024/TVM/2024/TCP நாள்.06.02.2024 மற்றும் (மவ/ந.ஊ.உ.இ (தி.மலை). எண்.31/2024 நாள். 07.02.2024 ன் படி சேத்துப்பட்டு கண்ணனூர் மதுரா பழம்பேட்டை சர்வே எண்கள். 417/1, 417/2, 417/3, 417/4, 417/6, 417/7, ஆகியவற்றில் 1.65 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கிய 37 மனைகளுக்கு மட்டும் அங்கீகாரம் வழங்கப்படுகிறது.

## நிபந்தனைகள்

1. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுப்படியே உரிய மனைகளும், தெருக்களும் இருக்க வேண்டும் . இதில் எந்தவித மாறுதலும் கூடாது.
2. மனைப்பிரிவுக்காக ஒதுக்கப்பட்ட மனை இடங்களில் மனை தவிர்த்து வேறு கட்டிடங்கள் ஏதும் கட்டக்கூடாது. கடைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களில் கடைகள் மட்டுமே கட்டப்பட வேண்டும்.
3. மனைப்பிரிவு இடத்தைச் சுற்றிலும் 1.50 மீ அல்லது 5 அடி உயரத்திற்கு மட்டுமே சுவர் மற்றும் வேலி அமைத்துக்கொள்ள வேண்டும்.
4. பொது சுகாதாரத்திற்கு தீங்கேற்படா வண்ணம் நல்ல காற்றோட்டத்துடன் மனைகள் கட்டப்பட வேண்டும்.
5. தெருக்களில் ஒவ்வொரு வீட்டிற்கும் முன்புறம் நிழல் தரும் மரங்களை வளர்க்க வேண்டும். ஒவ்வொரு வீட்டிற்கு மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கப்பட வேண்டும்.
6. மனைப்பிரிவு அங்கீகார எண், நாள் மற்றும் மன்றத் தீர்மானம் எண், நாள் ஆகியவை குறித்து விளக்கமான அறிவிப்பு பலகையை உரிய இடத்தில் நிறுவப்பட வேண்டும்.
7. மனைப்பிரிவு அனுமதிக்கப்பட்ட நாள் முதல் காலியிட வரி நிர்ணயம் செய்யப்படும்
8. உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு திருவண்ணாமலை மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் அரசாணைக்குட்பட்டு கட்டிட விதிகள் மற்றும் அரசின் வழிகாட்டுதலின் அடிப்படையில் (ம.வ/ந.ஊ.உ.இ (தி.மலை)எண்.31/2024 நாள்.07.02.2024) எண்ணிட்ட கடிதத்தில் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியது, மேற்படி மனைப்பிரிவு தொடர்பாக பேரூராட்சி செயல் அலுவலரால் இறுதி ஒப்புதல் வழங்கியதில் மனைப்பிரிவு தொடர்பாக எதிர்காலத்தில் ஆட்சேபனைகள், இழப்பீடுகள் மற்றும் தணிக்கை தொடர்பாக ஆட்சேபனைகள் எழுப்பும் பட்சத்தில்நிபந்தனைகளுக்குட்பட்டும். நிர்வாக ரீதியாக மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்குட்படவேண்டும்.
9. அரசு கடிதம் எண்.19113/ந.வ.4(3)2017–1. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிதுறை நாள்.30.08.2017 மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையாளர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12943/2018/LA1 நாள். 08.09.2017 – ன்படி நிபந்தனைக்குட்பட்டு அனுமதி உத்திரவு வழங்கப்படுகிறது.
10. மனைப்பிரிவு மனை எண். 1 முதல் 37 மனைகளுக்கு மட்டும் அங்கீகாரம் வழங்கப்படுகிறது.
11. பார்வை 11 – ல் காணும் அரசாணை எண். 141 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 16.07.2022 – ல் தெரிவித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் நிபந்தணைகளின் அடிப்படையில் செயல் படவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் இம்மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்கப்படுகிறது.

31/5/24

செயல் அலுவலர்
சேத்துப்பட்டு பேரூராட்சி
திருவண்ணாமலை மாவட்டம்

இணைப்பு : வரைபடம்

31/5/2024

பெறுபவர்
திருமதி.ஜெ.ரேவதி, திரு.ஆர்.முருகன், திருமதி.ஜி.மைதிலி,
திருமதி.எஸ்.பாரதி மற்றும் திரு.என்.ஆர்.சங்கர்
பழம்பேட்டை சேத்துப்பட்டு.
திருவண்ணாமலை மாவட்டம்

நகல்

1. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், சேத்துப்பட்டு.
2. திருவண்ணாமலை மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.